தொகுதி 7] [பகுதி 8

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சித்ரபானு ௵ கார்த்திகை ௴

NOVEMBER 1942

பிரசுர கர்த்தர்கள் :

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்


பக்கம்

1. இயற்கைப் பாடமும் தோட்டவேலையும் .... .... 185
   —எம். கே. ராமமூர்த்தி
2. மாணவர் தன்மையும் ஆசிரியர் பான்மையும் .... 191
   —P. N. கல்யாணசுந்தரம்
3. **Extracts from Fort St. George Gazette** .... 197
4. கணிதம் போதித்தல் .... .... .... 198
   —V. Arunajatai, M.A., L.T.
5. செய்தித் திரட்டு .... .... .... .... 202
6. கடிதப் பெட்டி. .... .... .... .... 206
7. பத்திராதிபர் குறிப்புகள் .... .... .... 208


---

## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா

1942 நவம்பர் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

வட ஆற்காடு — N. A. 33.
தென்னாற்காடு — S. A 2.
தஞ்சாவூர் — Tan. 27, 34-A.
திருச்சி — Tri. 18, 20.
திருநெல்வேலி — Tin. 26.
சேலம் — S. 46.
கோயமுத்தூர் — Co. 54.

குறிப்பு —சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபிஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்.

# பாலர் கல்வி

தொகுதி 7 | 1942 ௵ நவம்பர் ௴ சித்ரபாநு ௵ கார்த்திகை ௴ | பகுதி 8


## இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்


எம். கே. ராமமூர்த்தி அய்யர், B.A., L.T.,


ஆரம்பப் பாடசாலைகளில் பயிலும் சிறுவர்களுக்கு தாய்மொழி, கணிதம், பூகோளம், சரித்திரம், இயற்கைப் பாடம் ஆகிய பல பாடங்களைக் கற்பிக்கிறோம். எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்பது நம் நாட்டு பழமொழிகளில் ஒன்றாகும். இதனால் மொழிகள் கணிதம் முதலியவற்றை அறிந்து கொள்ளுவதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டுகின்றன. இவ்விதம் அபிப்பிராயம் தொன்றுதொட்டு எந்நாட்டிலும் இருந்துவருகின்றது. இவை தவிர மற்றுமுள்ள பூகோளம், சரித்திரம் இயற்கைப் பாடம் முதலியவை சமீபகாலத்தில் அதாவது சில ஐம்பது அல்லது அறுபது வருடங்களாகத்தான் பள்ளிக்கூடப் பாடங்களில் சேர்ந்தவையாக வழங்கிவருகின்றன. இயற்கைப் பாடங்களைப் போதிப்பதின் நோக்கம் என்னவென்று யோசிப்பது அவசியமாகும்.

### 1. இயற்கை பாடம் கற்பிப்பதின் நோக்கம்

சிறுவர்களுக்கு அவர்களின் சுற்றுப்புறத்தில் காணப்படும் இயற்கைப் பொருள்களைப்பற்றிய விஷயங்களை அறிந்துகொள்ள சுபாவத்திலே ஆவல் உண்டு. அதுவும் அவ்விஷயங்களை தங்கள் சுயமுயற்சியினாலேயே அறிவது அவர்களின் சுபாவ குணங்களில் ஒன்றாகும்.

இவ்விதம் அறிவை விருத்திசெய்யக்கூடிய குணங்களை தூண்டுவதும் அல்லது இயற்கையிலேயே உண்டாக்கியவைகளை அதிகப்படுத்துவதும் கல்விகற்பிப்போரின் முக்கிய நோக்கமாகும்.

இப்பாடங்களை கற்பதால் சுற்றுப்புறத்திலுள்ள பொருள்களை உற்று கவனித்து அவைகளை நன்கு கவனிக்கும் பழக்கம் விருத்தியாவ

துடன் இயற்கை அற்புதங்களை கவனித்து அறிவதால் ஏற்படும் மகிழ்ச்சியையும் மாணவர்கள் பெறக்கூடும்.

ஒருவன் சுற்றுப்புறத்திலுள்ள பொருள்களின் குணங்கள் அல்லது சுற்றுப்புறத்திலுள்ள தாவரங்கள், பிராணிகள் இவைகளின் வாழ்க்கை விதங்கள் முதலியவற்றை அறியாமல் இருப்பானாகில் அவனைக் கற்றறிந்தவன் என்று கருதலாகாது. அவன் படிப்பும் பூர்ணமானது ஆகாது.

நம் நாட்டுத் தொழில்களில் விவசாயம் முக்கியமானது. மேலும் நம் நாட்டில் வசிப்போரில் பெரும்பான்மையோர் கிராமங்களில் வசிக்கின்றனர். அதிலும் முக்கியமாக விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். இயற்கைப்பாடம் தோட்டவேலை முதலிய பாடங்களில் கற்ற விஷயங்கள் விவசாயத்தொழிலுக்கு வேண்டிய அளவுக்கு அடிப்படையாகும். உயர்தர பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் கற்கும் விஞ்ஞானம் தாவரநூல், உயிர் நூல் முதலியவற்றைக் கற்பிக்கும் இப்பாடங்களைக் கற்பதில் ஏற்படும் பயிற்சி மிக்க உபயோகமானதே.

## 2. இயற்கைப்பாடம் கற்பிக்கும் முறை :

இயற்கைப்பாடம் கற்பிப்பதின் நோக்கங்கள் நிறைவேற வேண்டுமானல் நாம் அதைக் கற்பிப்பதில் கையாளவேண்டிய முறைகளை கவனித்தல் அவசியம். நமது முக்கிய நோக்கம் விஷயங்களை போதிப்பதல்லாமல் பிள்ளைகளுக்கு தங்கள் சுய முயற்சியினால் விஷயங்களை அறியும் சக்தி ஏற்படுதல் வேண்டும் என்பதேயாகும். இந்நோக்கத்தைக் கருதினல் பிள்ளைகள் புத்தகங்கள் மூலமாவது உபாத்தியாயரிடமிருந்தாவது இயற்கைப் பாடங்களைக் கற்றுக் கொள்ளல் பரீட்சை கேள்விகளுக்கு விடையளிக்கத்தான் பயன்படும். பிள்ளைகளை பொருள்களையும், பிராணிகளையும், தாவரங்களையும் நேரில் பார்க்கச் செய்தல் அவசியம்.

ஆதலால் இயற்கைப் பாடங்களை போதிக்க வயல்களும் தோட்டங்களும், வகுப்பு அறைகளைக் காட்டிலும் மேலானவைகளாகும். கூடுமான வரையில் தோட்டங்களுக்கும் அருகிலுள்ள வயல்களுக்கும் பிள்ளைகளை அழைத்து அவர்கள் அறிய வேண்டியவைகளை நேரில் காணச் செய்து பிறகு அவர்கள் கண்டறிந்த விஷயங்களைப் பற்றி வகுப்பறைகளில் விவரித்துப் பேசுவது சிறந்த முறையாகும். ஆனல் இவ்விதம் பாடதிட்டம் முழுவதும் கற்பிப்பதனல் உபாத்தியாயர்களுக்கு அதற்கு வேண்டிய அவகாசமும் மற்ற வசதிகளும் கிடைப்பதரிது. ஆகவே பிள்ளைகள் கற்க வேண்டிய விஷயங்களை பள்ளிக்கூடத்திலேயே கூடுமான வரையில் அதற்கேற்ற வசதிகள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

## 3. இயற்கைப் பாடம் போதிக்க அவசியமான சாதனங்கள்.

இயற்கைப் பாடங்களை கற்பிக்கும் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் ஒரு தோட்டம் அவசியம். இதில் பிள்ளைகள் கற்க வேண்டியது செடி

களை வளர்ப்பது தவிர, அவர்கள் இயற்கைப் பாடங்களில் கற்க வேண்டிய பிராணிகளையும், பறவைகளையும் நேரில் கண்டறிந்து கொள்ளுவதற்கு தோட்டமே ஒரு விதம் அனுகூலமாகும். தோட்டத்தில் தவளைகள் மண் புழுக்கள், நத்தை, வண்ணாத்திப்பூச்சி, தும்பி, தட்டாரப்பூச்சி முதலிய ஜந்துக்கள் காணப்படும் இந்த ஜந்துக்களைப் பள்ளிக்கூட அறைக்கு கொண்டு வந்து கவனித்துப் பார்ப்பதைவிட அவை இயற்கையில் வாழும் இடங்களிலேயே பார்ப்பது மேலானது. இவை தவிர பல பறவைகள் தோட்டத்திலுள்ள மரங்களில் வசிக்கக் கூடும் அல்லது அங்கு வந்து தங்கக் கூடும். இவைகளைப் பற்றிய விஷயங்களை அறிந்து கொள்ளுவதற்கும் தோட்டம் இருப்பது அனுகூலமாகுமல்லவா?

சில தோட்டங்களில் பறவைகள் வந்து தங்குவதற்கு வேண்டிய வசதிகள் ஏற்படுத்த பறவைகளை வரவழைப்பதுண்டு. இதன் நிமித்தம் தோட்டத்தின் நடுவில் ஒரு உயரமான கொம்பை நட்டு அதன் மீது ஒரு பலகையை அமைத்திருப்பார்கள். இப்பலகையின் மீது தானியங்களைத் தூவியிருப்பார்கள். பறவைகள் குடிப்பதற்கு ஒரு கிண்ணத்தில் தண்ணீரையும் வைப்பார்கள். இவ்விதம் அமைத்திருக்கும் பலகை மீது பறவைகள் வந்து சேரக்கூடும். ஆனால் அவ்விதம் அமைத்துள்ள இடத்திற்கு பூனை முதலிய துஷ்டப் பிராணிகள் வந்து பறவைகளுக்குத் தீங்கிழைக்காவண்ணம் வேண்டிய உபாயங்களைத் தேடுதல் அவசியமாகும். இதைத்தவிர மீன்களை வளர்ப்பதற்கு வேண்டிய நீர்த் தொட்டிகளும், சிற்றுயிர்ப் பிராணிகளை வளர்ப்பதற்கு வேண்டிய கூடுகளையும் தோட்டத்திலோ அல்லது பள்ளிக்கூட அறைகளிலேயோ வைத்துக்கொள்ளலாம்.

## 4. தோட்டப் பயிற்சி.

அநேக பள்ளிக்கூடங்களில் தோட்டம் போடுவதற்குப் போதுமான இடமும் கிடையாது; மற்ற வசதிகளும் கிடைப்பதில்லை என்னும் குறை வெகு சகஜமாய் இருக்கிறது. ஒரே நாளில் இவ்வசதிகள் ஏற்படுவது சுலபமல்ல. பள்ளிக்கூட படிப்பு விஷயங்களில் அதிக ஊக்கஞ் செலுத்தி அதை முன்னேறச் செய்வதற்காகச் செலவு செய்ய முன் வருபவர் எங்கும் குறைவு. அதிலும் நம் நாட்டில் மிகக் குறைவே தான். ஆயினும் கூடிய வரையில் இப்பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்கள் அவர்களின் ஊக்கத்தினால் அக்குறைகளை ஓரளவு போக்கிக் கொள்ளலாம். கிடைத்த இடத்தைக் கொண்டும் பள்ளிக்கூடப் பிள்ளைகளின் உதவியை வைத்துக் கொண்டும் கூடுமான வரையில் அவ்விடத்தில் முக்கியமான தாவரங்களை பயிர் செய்தல் அவசியம். சிறிதேனும் இடங்கிடைக்காவிடில், பூந்தொட்டிகளிலோ, பழைய மண்ணெண்ணெய் தகரங்களிலோ, வாளிகளிலோ, சில முக்கியச் செடிகளையாவது பயிர் செய்துகொள்ளலாம். தோட்ட வேலையைப் பற்றி இரண்டு முக்கிய விஷயங்களை உபாத்தியாயர்கள் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும். அழகிற்காக வளர்க்கப்படும் க்ரோட்

டன்களையும் (**Crotons**) பெரன்களையும் (**Ferns**) அதிகம் வளர்க்காமல் சுற்றுப்புறத்தில் வளரக்கூடிய காய் கறிச் செடிகளையும் கொடிகளையும் வளர்த்தல் பிள்ளைகளுக்கு அதிகப் பயன்படும். இரண்டாவதாக தோட்ட வேலையில் பிள்ளைகள் தானாகப் பயிரிட்டுப் பார்க்க வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும். தோட்டத்தில் பாத்திகள் அமைத்து ஒவ்வொரு பிள்ளைகளுக்கு ஒரு பாத்தி வீதம் கொடுத்து அவர்களைக் கொண்டே பாத்திகளை பண்படுத்தி அதில் எருக்களைச் சேர்த்து, விதைகளைக் கொண்டும், நாற்றுக்களைக் கொண்டும், வேறு விதங்களிலும் வெவ்வேறு தாவரங்களை வளர்க்கச் செய்யவேண்டும். பிறகு பாத்திகளில் ஏற்படும் வளர்ச்சியைக் கவனித்துவருவதுடன் பாத்திகளில் வளரும் களைகளைப் பிடுங்கி எரியச் செய்யவேண்டும். பிள்ளைகளின் பாத்திகளிலுள்ள செடிகளின் வளர்ச்சியை உபாத்தியாயர்கள் பார்வையிட்டு பிள்ளைகள் பயிர் செய்யும் முறைகளில் குறைகள் இருந்தால் அவைகளை எடுத்துக் காட்டியும், நன்றாய் வளர்க்கப் பட்டுள்ள பாத்திகளின் வளர்ச்சியைப் புகழ்ந்து பேசியும் பிள்ளைகளுக்குத் தோட்ட வேலையில் விருப்பம் ஏற்படச் செய்தல் நன்முறையாகும். இவ்விதம் பாத்திகளை பார்வையிட்டு வரும்பொழுது பிள்ளைகளின் தோட்டக் குறிப்புப் புத்தகங்களில் (**Garden Diary**) தோட்ட வேலை சம்பந்தமான முக்கிய விஷயங்களைக் குறித்துககொள்ளச் சொல்லவேண்டும்.

மேல் நாடுகளில் பள்ளிக்கூடங்களில் இளைஞர்கள் தோட்டப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் அளவில் மிகச் சிறிய அளவு தான் நமது நாட்டில் அதே வயதுள்ள இளைஞர்கள் தோட்டப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்கள் எனத் தோன்றுகிறது. நமது சிறுவர்கள் அச்சிறுவர்களைவிட அறிவில் குறைந்தவர்களல்ல, நம் நாட்டைப் போல் அந்நாடுகளில் தோட்ட வேலை தொன்றுதொட்டு வழங்கவில்லை. ஆயினும் இவ்வித நிலைக்கு நம் நாட்டு உபாத்தியாயர்களின் ஊக்கக் குறைவே முக்கிய காரணம் என்று பிறர் சொல்ல நாம் இடங்கொடுக்கக் கூடாது.

## 5. பொருட் காட்சி சாலை.

இயற்கைப் பாடங்களைப் போதிக்க பஞ்சடைத்த பறவைகள், எலும்புக்கூடுகள் முதலியவை மிக்க உபயோகமாகும். இவைகளைத் தவிர, பலவித விதைகள், பூச்சிகள், பட்சிகள் கூடு முதலியவற்றை சேகரிக்கலாம். இவை தவிர பலவித கற்கள், இலைகள், முட்டைகள், மண்ணால் செய்த பொம்மைகள் முதலியவற்றைச் சேர்க்கலாம். அவைகளும் இயற்கைப் பாட சம்பந்தமானவைகளாய் இருந்தால் சிலாக்கியம். இவைகளைச் சேர்ப்பதிலுங்கூட மாணவர்கள் மிகவும் ஊக்கங் காட்டுவார்கள். சிறுவர்களுக்கு பொருள்களைச் சேகரிப்பதில் இயற்கையாகவே ஓர் அவா உண்டு. அதுவும் உபாத்தியாயர் அவர்களைச் சேர்த்துக்கொண்டு வரச் சொன்னால் அவர்கள் அதிக உற்சாகத்துடன் அவ்வேலையைச் செய்ய முன்வருவார்கள் என்பது நிச்சயம். மேலும் அவர்களின் ஆசை

யைத் தூண்ட காட்சி சாலைக்குக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு பொருளிலும் அதைக் கொடுத்த மாணவன் பெயரையும் கொடுத்த தேதியையும் ஒரு துண்டு காகிதத்தில் எழுதி ஒட்டி வைக்கலாம், அல்லது காட்சி சாலைக்கு பொருள்கள் கொடுத்துதவிய மாணவர்களின் பெயர்களையும் அவர்கள் கொடுத்த பொருள்களையும் ஒரு பெரிய காகித அட்டையில் எழுதி பள்ளிக்கூடத்தில் தொங்கவிடலாம்.

பள்ளிக்கூடப் பொருட் காட்சி சாலைகளில் பொருள்களைச் சேர்த்து ஒழுங்காகவும் சாவதானமாகவும் வைத்திருப்பதேமிகக் கடினம். சில பள்ளிக்கூடங்களில் அதிகமாகச் சேர்ப்பதன் பயனாக அவைகளை ஒழுங்காக வைப்பதற்கு போதுமான இடங் கிடைப்பதில்லை. இச்சேர்க்கப்பட்டவைகளை ஒழுங்காகவும், தூசு அடையாமலும், மற்ற விதங்களில் கெடாமலும் காத்தல் அவசியம். கூடுமானால்அவைகளை வைப்பதற்கு வேண்டிய கண்ணாடிப் பெட்டிகளை வாங்கிப் பத்திரமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

## 6. படங்கள்

பொருட்காட்சி சாலைப் பொருள்களைப்போல் பல முக்கிய சித்திரங்களையும் பாடங்களை கற்பிக்க உபயோகிக்கலாம். முக்கிய பட்சிகள், மரங்கள், புஷ்பங்கள் முதலியவற்றின் படங்களைக் காட்டி போதிப்பதால் பிள்ளைகளின் மனதில் விஷயங்கள் எளிதில் பதியும். வாயினால் விஸ்தரித்து சொல்லுவதைக் காட்டிலும் சில விஷயங்களை சித்திரங்கள் மூலமாய் சுலபமாய் அறியச் செய்யலாம். வகுப்புகளில் சில மாணவர்கள் வெகு நேர்த்தியாய் வரையக்கூடியவர்கள் இருப்பதுண்டு. அவர்களைக்கொண்டும், நேர்த்தியாய் வரையக்கூடிய உபாத்தியாயர்களைக்கொண்டும் பல முக்கிய படங்களை நன்றாய் வரைந்து வைத்துக்கொள்ளவேண்டும். இந்தப் படங்கள் வர்ணங்களுடன் கூடியவையாயிருந்தால் பிள்ளைகள் அவைகளைக்கண்டு விரும்புவார்கள். அதுவும் இயற்கைப் பொருள்களின் இயற்கை வர்ணங்களுடன் கூடியனவாயிருந்தால் சிலாக்கியமானது. இப்படங்களின் எண்ணிக்கையை அவைகளிலேயே குறித்து இவைகளை ஒருங்கே சேர்த்து பத்திரமாக வைத்துக் கொள்ளவேண்டும். பாடத்தை ஒட்டிய படங்களை பாடங்களை நடத்தும் பொழுது தகுந்த சட்டங்களில் பொருத்தி வகுப்பிற்குக் காட்டி திரும்பி வைத்து விடுதல் தக்க முறையாகும். படங்கள் எல்லாவற்றையும் சுவர்களில் அடித்துவைப்பதால் அவைகள் நீடித்திருப்பது அரிது.

## 7. உல்லாசப் பிரயாணம் :

பள்ளிக்கூடத்திற்கு அருகிலுள்ள இடங்களுக்கு பிள்ளைகளை உல்லாசப் பிரயாணங்களுக்கு அழைத்துச் செல்லுதல், இயற்கைப் பாடம் போதிப்பதற்கு பள்ளிக்கூடத்தில் காட்ட முடியாத செடிகளையும், மரங்களையும், பிராணிகளையும் காட்டுவதுடன், அணைக்கட்டு மதகுகள்

முதலியவை அமைக்கப்பட் டிருப்பதையும், காட்டலாம். பக்கத்தில் கருமான், தச்சன், கூடை முடைவோன் முதலியவர்கள் வேலை செய்வதையுங் காட்டக்கூடும். ஆனல் இந்த உல்லாசப் பிரயாணங்கள் செல்லும்பொழுது அதிகக் கூட்டமாகப் பிள்ளைகளை அழைத்துச் செல்லக்கூடாது. ஒவ்வொரு உபாத்தியாயருடன் சுமார் 10 அல்லது 15 பிள்ளைகளை அழைத்துச் செல்லுதல் நலம். அதற்குமேல் கூட்டமாகச் சென்றுல் விஷயங்களைக் கற்க போதுமான சௌகரியங்கள் கிடைக்கா ; மேலும் பிள்ளைகளை சாவதானமாக பார்த்துக்கொண்டு வருவதிலும் சிரமம் ஏற்படக்கூடும். ஆதலால் வகுப்பில் உள்ள பிள்ளைகளை தடவைக்கு 15 அல்லது 20 பிள்ளைகள் வீதமாக அழைத்துச் செல்லுவதே தக்க முறையாகும். இவ்விதம் உல்லாசப் பிரயாணங்களுக்கு அழைத்துச்செல்லும் முன் உபாத்தியாயர்கள் அவ்விடங்களுக்குச் சென்று அவ்விடங்களில் உள்ள சௌகரியங்களைக் கவனித்து அவ்விடங்களில் பிள்ளைகளுக்கு எவ் விஷயங்களை பார்க்கச் செய்யலாம் என்று அறிந்து அதன்பின் பிரயாணங்களை ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேற்கூறிய பல விஷயங்களை மனதில் கொண்டு உபாத்தியாயர்கள் இயற்கைப் பாடங்களை போதித்தால் அதில் பிள்ளைகளுக்கு ஊக்கம் பெருகுவதுடன் அவர்கள் வாழ்க்கையிலும் இன்பமடைவார்கள். இதை விட உபாத்தியாயர்கள் வேண்டுவது வேறில்லை.

---


மாணவர்களே! வாலிபர்களே !!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

**சுவாமி விவேகாநந்தர்**

**ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.**

★

| | | |
|---|---|---|
| ஸ்ரீ விவேகாநந்த சரித்திரம் | விலை | 0—12—0 |
| ,, ,, கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, ,, நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, ,, சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, ,, எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,** மயிலாப்பூர், சென்னை.

# மாணவர் தன்மையும் ஆசிரியர் பான்மையும்

P. N. Kalyana Sundaram, General Secretary,
Teachers' Association, Madurantakam

ஆசிரியரின் மகத்தான பொறுப்பு :—பள்ளிக்கூடமே மனிதனின் பயிற்சிக்கூடம். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களுக்குக் கல்வி போதிப்பதுடன் நில்லாது—அவர்களின் ஒழுக்கம், நற்குண நற்செய்கைகள், உடல் வன்மை இவைகளையும் ஆசிரியர் கவனித்து வரல்வேண்டியதாகிறது. ஏனெனில் குழந்தைப் பருவமும், வாலிபப் பருவமும், மிக்க இளகலான, எளிதில் மாறுதலடையக் கூடிய உணர்ச்சிமிக்க பருவமாகும். இக்காலத்தில்தான் மனிதனுடைய தேகம் கட்டுக் கடங்காமல் இருக்க முயல்கிறது. அங்கங்களின் வளர்ச்சியும், பொதுவாகக் கல்வியறிவுக் கிருப்பிடமான மூளையும் வெகு சீக்கிரத்தில் வளர ஆரம்பிக்கிறது. ஆதலின் குழந்தைகளின் மூளையையும் அங்கங்களையும் சரியான வழியில் செலுத்துவோமாஞல் அக்குழந்தைகள் பிற்காலத்தில் சமூகத்திற்கே நல்ல மணிகளாய் விளங்குவார்கள். ஆதலின் குழந்தைகளின் முன்னேற்றத்தில் உணவு, உடை, பாதுகாப்பு முதலியவைகளில் பெற்ரேருக்கு சிரத்தை யுள்ளதுபோலக் கல்வி விஷயத்திலும், அவர்களைச் சிறந்த வருங்கால பிரஜைகளாக்கிச் சமூகத்திற்கு உதவும்படி செய்வதிலும், ஆசிரியர் ஒரு தந்தையைப் போல் சிரத்தை யெடுத்துக்கொள்ளல் வேண்டும்.

குழந்தைகளிடம் ஆசிரியர் தந்தையைப் போலவும், சகோதரனைப் போலவும் பாவித்துக்கொண்டு அன்புகாட்டி அதன் மூலம் குழந்தைகள் தாமாகப் பள்ளிக்கு வரும்படி செய்யவேண்டும். கல்வி போதிக்கும் ஆசிரியர் கல்வியின் பரந்த நோக்கங்கள் யாவை? சிறந்த முறைகளெவை? கற்கும் குழந்தைகளின் தன்மைகள் எத்தன்மையது? எங்தெந்த முறைகளை அனுசரித்தால் வகுப்பில் மந்தமாயும், விஷமத்தனமுள்ள குழந்தைகளையும் முன்னுக்குக் கொண்டு வரலாம்? என்ற விஷயங்களையெல்லாம் புத்தகவாயிலாகவும் அனுபவவாயிலாகவும் கண்டறிய வேண்டும்.

கல்வியின் நோக்கம் :—பெற்ருேரும் மற்ருேரும் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடம்அனுப்புமுன் பள்ளிக்கூடத்திலிருந்து தங்கள் சிறுவர்கள் அநந்தமான நன்மைகளை அடையக்கூடும் என்ற நம்பிக்கையைத்தான் எதிர்ப்பார்க்கிருர்கள். அவர்கள் விரும்புவன யாவை? "ஆரோக்கியமும் திடமும் கூடின சரீரமுள்ளவர்களாகவும், புத்தி கூர்மையுள்ளவர்களாகவும், தேசாபிமானிகளாகவும், பிற்காலத்தில் தாமே உழைத்துப் பிழைக்கக் கூடியவர்களாகவும், தன்னடக்கம் தைரியம் முதலிய சிறந்த குணக்குன்றங்களாகவும்" நம் குழந்தைகள் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேறுவார்கள் என்பதே அனைவரின் நோக்கம். இவைகளே கல்வியின் அடிப்படையான நோக்கங்களாகும்.

கல்வி போதிக்கும் முறைகள் :—காலச் சக்கரம் வெகு வேகமாகச் சுழன்று வருகிறது. எல்லாத் துறைகளிலும் பற்பல மாறுதல்கள் ஏற்பட்டு வருவதேபோல் கல்வித் துறையிலும் போதிக்கும் முறையிலும் கூடப் பல மாறுதல்கள் ஏற்படுவது சகஜமே. கல்வி போதிக்கும்போது கவனிக்கக் கூடியவை இரண்டு.

1. கல்வியின் நோக்கங்களை நிறைவேற்ற முயற்சி.

2. குழந்தைகளின் தன்மைகளுக்குத் தக்கபடி போதித்தல். இவ்விரண்டையும் பிரிக்கமுடியாது. ஆதலின் குழந்தைகளின் மனோ வளர்ச்சிக்கும் சுபாவத்திற்கும் தக்கபடி ஆசிரியர் பலவித பாடங்களைப் போதிக்கும்போதே—கல்வியின் நோக்கங்களையும் மனதிலிருத்தி அவை நிறைவேறும் வண்ணம் போதிக்கவேண்டும். இதுவே போதிக்கும் முறை எனப்படும்.

மேனாடுகளில் தங்கள் வாணாள் முழுவதையும் கல்விக்காகவே அர்ப்பணஞ் செய்து. குழந்தைகளுடன் பழகி, அவர்களின் பொதுவான குணாதிசயங்களை வயதிற்குத் தக்கபடி பகுத்தறிந்து—குழந்தைகள் விரும்பும் வண்ணம் கல்வி போதிக்கும் முறைகளைப் பலர் கண்டு பிடித்து உலகுக்கு உதவியுள்ளார்கள். நம் நாட்டிலும் தற்போது எத்தனையோ ஆசிரியர்கள் குழந்தைகளின் கல்வி முறைகளைக் கண்டு பிடிக்கப் பெரும் பாடுபட்டு வருகின்றனர். ஆரம்பக் கல்வி முறைகளுக்குத் தன் காலம் முழுவதையும் செலவிடும் நம் நண்பர் **T. S.** ஜெகந்நாதம் அவர்களை உதாரணமாகக் கொண்டு நாமும் பற்பல முறைகளை நம் கிராமச் சிறுவர்களுக்கு ஏற்ற முறையில் கண்டுபிடித்துப் போதிப்போமாக. இப் பெரியார்களின் முறைகளும் உபகரணங் களும் சிறந்தவைகள். ஆயினும் நம் ஏழை நாட்டில் வாழும் எளிய சிறுவர்களுக்கு அம்முறைகள் பயன்படுமே தவிற அவர்கள் கூறியுள்ள உபகரணங்களை எதிர்ப்பார்க்க முடியாது. ஏனெனில் அவை அதிக பொருட் செலவில் தயாரிக்கப் படல்வேண்டும். ஆதலின் நாம் அப் பெரியார்களின் வழியைப் பின்பற்றி—நம் நாட்டுச் சிறுவர்களின் குணாதிசயங்களை அவர்களுடன் நெருங்கிப் பழகிக் கண்டறிந்து, ஏற்ற உபகரணங்களைக் குறைந்த செலவில் தயாரித்துக் குழந்தைகள் விரும்பும் புதிய முறையில் பாடங்களைக் கற்பித்தல் வேண்டும். **Duisional officer** லோபோ அவர்கள் சொல்லியபடி—**Dolton plan, Project method, Warda method** என்ற எந்த முறையிலாவது போதியுங்கள். போதிய பலனளிக்கும் முறையாக மட்டும் இருக்கட்டும் என்று அவர் சொல்வது குறிப்பிடத்தக்கது.

ஊக்கம் ஒரு சிறிதுமிராத ஆசிரியரை எந்த முறையில் போதிக் கும்படி வற்புறுத்த முடியும். ஆதலின் ஆசிரியர்கள் கல்வியின் நோக் கங்கள் நிறைவேறும் வண்ணம்—குழந்தைகளுக்கு உற்சாக மேற்படும் விதத்தில் அவர்களின் வயதிற்கும் மனோ வளர்ச்சிக்கும் தக்கபடி பாடங்

களை நல்ல உபகரணங்களுடன் போதிக்கும் எந்த முறையும் சரியான முறை (Method) ஆகும்.

ஒரு பாடத்தைப் போதிக்குமுன் சிறந்த ஆசிரியர் என்ன செய்ய வேண்டும்? கற்கும் குழந்தைகளின் வகுப்பு—வயது—மனோ வளர்ச்சி—அவர்களின் விருப்பம், இவைகளைக் கண்டறிந்து அதற்குத் தகுந்த வண்ணம்பாடத்தின் அளவைக் குறிப்பிட்ட நேரத்திற்குத் தகுந்தபடி பாகுபடுத்திக் கொள்ளல் வெகு அவசியம். உதாரணமாக 'யானை'யைப் பற்றி 1 முதல் 8 வகுப்பு வரையில் சொல்லித் தருகிறோம். முதல் வகுப்பில்—யானையின் வடிவம் மட்டும் தெளிவுபடுத்தப் படல்வேண்டும். அதன் அங்கங்களைப் பற்றிக் குழந்தைகளாக உற்சாகத்துடன் சொல்ல முன் வரும்படி அவர்களிடம் சம்பாஷித்தல். யானையைப் பார்த்திருக்கிறாயா? ஆமாம் சார் என்று எல்லாக் குழந்தைகளும் கூச்சலிடும். உபகரணம்.—யானையின் பெரிய படம். குட்டியுடன் யானை. யானையின் பலவித தோற்றங்கள்—அட்டையால் வெட்டிய யானையின் மாடல்—அதைப் பலகைகளில் ட்ரேஸ் செய்யச் சொல்லல்—முதலியன.

யானை—பெரியது—பெரிய கால்
,, காது
,, தலை
,, வயிறு etc. } தந்தம், துதிக்கை.

**VIII. Std :** வியாசப் பாடத்தின் முடிவில்.

யானை காணப்படும் இடங்கள்—அதன் குணதிசயங்கள்—ஆகாரம். தந்தத்தின் உபயோகங்கள்—எப்படிப் பழக்கப்படுகிறது. பிடிக்கப்படுகிறது. யானையின் உபயோகங்கள்—அதன் வேறு பெயர்கள்—அதைப்பற்றிய பல கதைகள் முதலிய ஞானம் ஏற்படும்படி போதிக்கிறோம்.

இந்த உதாரணத்திலிருந்து வகுப்புக்குத் தக்கபடி போதிக்கும் விஷயத்தின் அளவு, போதிக்கும் விதம், உபகரணங்கள் இவைகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பது விளங்கும். அத்துடன் போதிக்கும் முறையானது எல்லாப் பாடங்களுக்கும் ஒரேமாதிரியாக இராது. ஒரே விஷயத்தை வாசக பாடத்தில் கையாளப்படும் விதத்திற்கும் சரித்திர பாடத்தில் கையாளும் விதத்திற்கும் அதிக வித்தியாசம் உண்டு. (உ-ம்) ஏழாம் வகுப்பிற்கு 'சிவாஜி' (Explain).

ஆதலின் இவற்றை யெல்லாம் அனுசரித்துப் பாடத்தை முன்னரே தயார்செய்து குழந்தைகளுக்குக் கற்பிப்போமாயின்—குழந்தைகளில் 100-க்கு 75 பேர் நாம் போதித்த விஷயத்தை நன்கு அறிந்து கொண்டார்கள் என்று சோதனைமூலம் விளங்கினல் அதுவே 'சிறந்த முறை'யாகும். சரியான பலன் ஏற்படாவிட்டால் குறைகளைக் கண்டறிந்து அதே பாடத்தைப் போதித்து நம் முறையை அபிவிருத்தி

செய்துகொள்ள வேண்டும். நிறைய விஷயத்தைப் போதித்துச் சிறு வர்களுக்கு ஒன்றுமே விளங்காமல் இருப்பதைக் கூடியமட்டில் தவிர்த்து, குறைந்த அளவு விஷயத்தை நன்றாக அவர்கள் மனதில் பதியச் செய்வதே சிறந்த முறையாகும். இதை யாவரும் மறுக்க முடியாது. **(qualitative merits and not quantitative)**

மாணவர்களின் தன்மைகள்

இனி நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளின் தன்மை களைக் கவனிப்போம். சாதாரணமாக 6 வயதுமுதல் 14 வயது வரை யில் சராசரி வயதுள்ள பிள்ளைகளைப் பற்றியே நாம் கவனிக்கவேண்டும். குழந்தைகளின் தன்மைகளைக் கண்டறிந்து—அவர்களின் விருப்பு, வெறுப்பு, கல்வியில் ஊக்கம், அவர்களின் மனோ வளர்ச்சி இவைகளை ஊர்ஜிதப்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்குச் சுலபமான வழி யாது? ஆசிரியர் குழந்தைகளுடன் நெடுநாள் பழகித்தான் கண்டறிய லாம். அடுத்தபடி சுலபமான வழி—ஏற்கெனவே அவற்றைக் கண் டறிந்த கல்விப் பெரியார்களின் நூல்களினின்றும் கற்றறியலாம்.

பொதுவாகச் சிறுவர்களின் தன்மைகள் 6 வயது முதல் 11 வயது வரை ஒருவிதமாகவும், 11 வயது முதல் தொடங்கும் வாலிபப் பருவத் தில் சில மாறுதல்கள் ஏற்படவும் காணலாம். நிற்க, தன்மைகள் பொது வாக இரு வகைப்படும். 1. பிறவியின்பாற்படும். 2. ஆசிரியரால் வளர்க்கக்கூடிய தன்மைகள்.

1. பிறவியினால் அமைந்த தன்மைகளையும்கூட ஆசிரியர்கள் சில சமயங்களில் மாற்றிவிடக்கூடும் என்பது ஆன்றோர் கருத்து. ஆத லின் குழந்தைகளின் தன்மைகளைக் கண்டறியும் அவசியத்தை உணர்ந்த ஆசிரியர்கள் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பது அடுத்தபடி யாகிறது.

2. ஆசிரியர்களுக்கு அமைய வேண்டிய அருங் குணங்கள் ;

**(i) தோற்றம் (Personality)**: ஆசிரியர் புன்சிரிப்புடன் கூடியவ ராயும் தூயவெண்மை நிறமுள்ள ஆடை தரித்தவராகவும், எப்போதும் வகுப்பிற்குள் நுழையவேண்டும். ஆசிரியரின் பற்கள்—நகங்கள், உடை, உடல் இவற்றின் சுத்தம் குழந்தைகளுக்கு உதாரணமாக விளங்க வேண்டும். தாம்பூலம் தரித்தல், பொடி, புகை முதலிய பழக்கங்கள் துரதிர்ஷ்டவசமாக—ஆசிரியருக்கு இருப்பினும் அவர் குழந்தைகளின் பார்வையில் .பள்ளிக்கூடத்தேயாயினும் புறம்பேயாயினும் செய்யாமல் இருத்தல் வெகு அவசியமாகிறது. ஆசிரியர் ஆடம்பர உடையுடன் விளங்குதல் விரும்பத்தக்கதாகாது. ஏனெனில் எளிய குழந்தைகள் அம்மாதிரி தாமும் சிறந்த உடைகளைத் தரிக்கவேண்டும் என்று விரும்பிப் பெற்றோர்களின் சீற்றத்திற்குள்ளாகலாம். வகுப்பில் ஆசிரி

யரின் உடையழகையே பார்த்துக்கொண்டு பாடத்தைக் கவனியாமலும் சில சிறுவர்கள் இருப்பார்கள். இன்னும் பிறகாரணங்கள்பற்றி வகுப்பிற்குள் ஆசிரியருக்கு ஆடம்பர உடை அவசியமில்லை. எளிய உடை வேண்டும் என்பதை வியாஜமாக வைத்துக்கொண்டு ஒரு கோட்டு, ஒரே தலைப்பாகையைச் சுத்தம் செய்யாமல் வருஷக்கணக்காய் உபயோகிக்கிற ஆசிரியர்கள் அநேகமாக இப்போது இல்லையெனினும் இதுவும் வெறுக்கத் தக்கதேயாகும். குழந்தைகள் ஆசிரியரையே தெய்வம்போல் பாவித்து ஆசிரியரின் நடையுடை பாவனைகளைப் பின்பற்றி நடப்பதால் இதுவிஷயத்தில் நாம் சர்வ ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளவேண்டும்.

**(ii)** இன்சொல் : குடும்பக்கவலை, வறுமை ஆதியாம் எத்தனை கஷ்டங்கள் ஆசிரியருக் கிருப்பினும்—அவற்றைக் குழந்தைகள் அறியும்படி வெளிக்குக்காட்டாமல்—பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் உற்சாகமுள்ளவராகவும் குழந்தைகளிடம் அன்புடனும் பேசப் பழகல் வேண்டும்.

**(iii)** பொறுமை: கோபமின்மை, தீரயோசித்துக் குற்றங் களைதல், நிதானம் முதலிய அருங்குணங்கள் பாடசாலைக்குள் ஆசிரியருக்கு அவசியமாகிறது. இவற்றின் அவசியத்தை விரிக்கிற் பெருகுமாதலால் மேலே செல்வோம்.

**(iv)** கூச்சம் அல்லது சங்கோசம் : இக்குணம் சில ஆசிரியர்களிடம் காணலாம். வெகு புத்திசாலிகளாக அன்னார் இருந்தும் அவர்கள் நடத்தும் பாடம் போதிய பலனை யளிப்பதில்லை. வகுப்பிலும் உற்சாகம் குன்றி பெஞ்சுகளில் கொலுப் பொம்மைகள்போல் குழந்தைகள் காணப்படுகின்றனர். அதற்குக் காரணம் வயது முதிர்ந்த ஆசிரியர்களுக்கு இயற்கையாக ஏற்படும் சங்கோசமே. உதாரணமாக—நடிப்பும் பாட்டும் **(Action songs)** சொல்லித்தரும்போது உபாத்தியாயர் அசையாமல் உட்கார்ந்தபடியே சொல்லித்தரின் அவ்வகுப்பில் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் எப்படி சிருஷ்டிக்க முடியும். சிறு குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் ஆசிரியர் அதிக வயதை மறந்துவிட்டு, குழந்தைகளுடன் சேர்ந்துகொண்டு குதித்தும், ஆடியும், பாடியும், ஜாடை காட்டியும் சேட்டைகள் செய்தும் அவர்கள் மனதில் பதியும் வண்ணம் போதித்தல் அவசியம். இத்தகைய பாடங்களை நடத்த சங்கோசம் அகற்றப்பெறாத ஆசிரியர்—அப்பாடத்தை மட்டும் வேறு யாரிடமாவது ஒப்புவித்தலே அறிவுடைமையாகும். குழந்தைகளின் நலங்கருதி, ஒவ்வொரு பள்ளிக்கூடத் தலைமையாசிரியரும் இவ்விஷயத்தைக் கவனித்தல் வேண்டும்.

**(v)** நடத்தை : ஆசிரியர்கள் மகத்தான பொறுப்பை உணர்ந்து மகிதலம் பாராட்டும் வண்ணம் செய்வது ஆசிரியரின் மேலான வாழ்க்கையேயாகும். ஆதலின் அனைத்திற்கும் மேலாக—ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு வழிகாட்டிகளாகவும் பொதுவாக கிராம ஜனங்களுக்கே தீர

உதாரண புருஷராகவும்—விளங்கும்படி தம் வாழ்க்கையை—தினசரி வாழ்க்கையை—ஒழுங்குபடுத்திக் கொள்ளல் வேண்டும். காலத்தின் அருமை (காலத்தை வீணாக்காமை) வரவுக்குத் தக்க செலவு, ஆடம்பர மற்ற வாழ்க்கை, சொல், செயல் தூய்மை இவைகளை நடைமுறையில் பிறர் பின்பற்றும்படி நடத்திக் காட்டுபவரே சிறந்த ஆசிரியர்.

**(vi) குழந்தைகளின் தன்மைகள்** : நம்மிடம் ஒப்படைக்கப்படும் ஒரே வகுப்புக் குழந்தைகள் 30 பேரும் 30 தனிப்பட்ட தன்மைகள் வாய்ந்து காணப்படுவது கவனத்திற் குரியதாகும். எனினும் அனுபவ முதிர்ந்த ஆசிரியர்—குழந்தைகளுடன் பழகுவதன் மூலம் பொதுவான சில தன்மைகளைக் கண்டறிந்து அவற்றைக் கல்வி போதிக்கும்போது உபயோகித்தல் சிறந்த பலனை யளிக்கும். இதற்காகக் குழந்தைகளின் தன்மைகளைப்பற்றிக் கூறும் புத்தகங்களை வாங்கி ஒருமுறை படித்து விடுவதும் சரியான பலனை யளிக்காது. புத்தக அறிவும் ஒரு சிறிது அவசியந்தானெனினும், நேரில் குழந்தைகளுடன் பழகி அனுபவத்தைக் கொண்டு அறிவதுதான் சிறந்த பலனை நல்கும்.

அங்ஙனம் பழகுவதன் மூலம் பொதுப் படையாகக் காணபபடும் குழந்தைகளின் தன்மைகள் பின்வருமாறு :—

1. கட்டிலடங்காத விளையாட்டுத் தன்மை (Instinct of play) பலவித விளையாட்டுகள் பள்ளியில் வேண்டும்.

2. பூராயமாக ஆராயுந்தன்மை (Curiosity) விருத்திசெய்ய வசதிகள் உண்டுபண்ணவும்.

3. மனோ ராஜ்யம் செய்யும் தன்மை (Imagination) நன்கு பயன் படுத்திக் கொள்ளலாம்.

4. நடிக்கும் ஆசை (Imitation) விருத்தி செய்யவும்.

5. தற்பெருமை உயர்வு பாராட்டல் (Superiority and pride) சட்டாம்பிள்ளை போன்று பதவிகள் அளித்தல்.

6. உரிமை (Ownership) இவைகளுக்கு இடம் அளிக்கலாம்.

7. கட்டுப்படாமை (Freedom) ” ” ”

8. போட்டித் தன்மை (Competing) வியாசப் போட்டி, தேகப் பயிற்சிப் போட்டி மூலம் வசதிகள் தரலாம்.

9. விஷமத்தனம் (Mischief) இதை நல்ல வழியில் கண்டிக்கவும்.

10. கிறுக்கும் தன்மை (I, II, III) வகுப்புக் குழந்தைகள் சுவற்றில் கரித்துண்டு பென்ஸில் முதலிய கொண்டு கிறுக்குவது—(Scribbling) இதைச் சித்திர பாடத்தின் மூலம் பயன்பெறச் செய்யவும்.

11. பிடிவாத குணம்—(Obstinate) மனம் புண்படாத முறையில் திருத்தி நல்வழிப் படுத்தவேண்டும்.

12. பயமின்மை—தைரியம் (Courage) சரித்திர பாடத்தில் சிவாஜி போன்ற வீரர்களின் கதைகளை அடிக்கடி வற்புறுத்தலின் மூலம் விருத்தி செய்யலாம்.

13. அதி சுறு சுறுப்பு (Busy body—Over enthusiasm) இதனால் சில சமயங்களில் தீமை ஏற்படும். ஆகையால் சற்று இனிய முறையில் கண்டித்துத் திருத்தவேண்டும்.

14. காரணம் கேட்கும் தன்மை (Reasoning) என்ன? ஏன்? எப்படி என்று குழந்தைகள் நம்மைக் கேட்டறிய முற்படுங்கால்—அலட்சியம் செய்து அவர்களை அடக்கக்கூடாது. பதில் சொல்லித் தான் ஆக வேண்டும். இல்லையேல் குழந்தைகள் உதவாக் கரைகளாகவும் கோழைகளாகவும் ஆகிவிடக்கூடும்.

ஆதலின் மேற்கண்ட குழந்தைகளின் தன்மைகளும் இன்னும் பிறவும் எக்காலத்தும், எத்தேயத்தும் உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் பொது என்பதை நாம் உணரவேண்டும். அவர்களின் தன்மைகளையும் மனப் போக்கையும் கூர்ந்து கவனித்துச் சரியான முறையில் பயன்படுத்திப் போதிப்பின், எந்தப் புதிய முறையில் போதிப்பினும் பூரண வெற்றி ஏற்படும்.

குழந்தைகளின் தன்மைகளை நேரில் சதா கண்டறிவதும், அறிஞர்களின் நூல்களைப் படித்து அறிய முற்படுவதுமே ஒரு சிறந்த ஆரம்ப ஆசிரியரின் மேன்மையான லக்ஷியங்களாகும்.

இத்தகைய ஆசிரியர்கள் எந்தக் கண் காணாத இடத்தில் தன்னுடைய சேவையைச் செய்துவரினும் என்றேனும் ஓர்நாள் கல்வி உலகம் 'அவனை முன்னணியில் வைக்க முயற்சிக்கும் என்பது' உறுதி. விரிவஞ்சிச் சுருங்கக் கூறினேன்.

'உண்மை உழைப்பிற்கு ஊதியம் உண்டு.'

---

# EXTRACTS FROM FORT ST. GEORGE GAZETTER (PART I-B.)

## Training School-Leaving Certificate Examination March 1943

*Higher Elementary Grade*

### NOTICE

In partial modification of this office notice published on pages 544-545 of Part I-B of *Fort St. George Gazette*, dated 18th August 1942, it is hereby notified that applications from private candidates, Lower Elementary Grade Certificate holders coming up for the Higher Elementary Grade, will be accepted till 20th November 1942 with a penal fee of one rupee in respect of each application. No notice will be taken of applications sent by candidates direct to this office. Applications not received through the Inspecting Officers will not be accepted. All other conditions mentioned in this office notice quoted above, will hold good.

Office of the Commissioner for Govt. Examinations, *Madras, 6th November 1942.* (By Order)

P. N. CHAMU NAIR,
*Secretary.*

# கணிதம் போதித்தல்

Sri V. Arunajatai, M. A., L. T.

## 1. பின்னம்

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் சிறுவர்களுக்கு எண்களைக் கற்றுக் கொடுத்தல் ஒரு சிரமமான காரியமே. ஒரு அழகிய படம்வரைய சித்திரக் காரன் எவ்வளவு கண்ணும் கருத்தும் எடுத்துக்கொள்கிறானோ, தன்னுடைய புத்தியையும், மனோபாவத்தையும் உபயோகிக்கிறானோ அம்மாதிரியே உபாத்தியாயர்கள் சிறு குழந்தைகளின் மனதாகிய திரையில் 'எண்கள்' என்னும் சித்திரத்தைச் செவ்வனே வரைய எடுத்துக் கொள்ள வேண்டிய முயற்சியும், சிரமமும், உபயோகிக்கவேண்டிய சாதுர்யமும், மனோபாவமும் அளவற்றதாகும். 4, 5, வயதுள்ள ஒரு குழந்தை சாதாரணமாக 20, 30 அல்லது 50, 100 வரையிலும் கூடத் தவறாமல் சொல்வதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் அக்குழந்தை 'எண்' என்பதின் கருத்தையும், உபயோகத்தையும் உண்மையாக அறிந்திருக்கிறதெனச் சொல்லமுடியாது. குழந்தைகளுடைய மனது 'எண்' என்னும் ஊற்றில் ஊறி, அவர்கள் ஸ்வபாவமாக அதை அவர்களது சுற்றுப்புரத்திலுள்ள வஸ்துக்களின் சம்பந்தமாக உபயோகிக்க அறிதல் வேண்டும். கையில் எத்தனைவிரல்கள்? பூனை, நாய்களுக்குக் கால்கள் எத்தனை? என்ற இம்மாதிரிக் கேள்விகளுக்கு பதில் அளிக்கப் பழக்கப்பட வேண்டும். ஆரம்பத்தில் அவர்கள் மனதில் எண்களைப் பற்றிய சரியான கருத்துப் படியுமாறு பூனைக்குக் கால்கள் 1, 2, 3, 4; என் கை விரல்கள் 1, 2, 3, 4, 5 என நேரே காட்டித் தெரிந்துகொள்ளச் சொல்லிக் கொடுக்கவேண்டும்.

இம்மாதிரியாக வஸ்துக்களை எண்ணி அவைகளின் அளவைக் குறிக்க நாம் எண்களை உபயோகிக்கின்றோம் என்னும் அபிப்பிராயம் அவர்களது மனதில் ஆழ்ந்து ஊன்றவேண்டும். இத்தகைய எண்ணத்தை வளர்க்க சிறு குழந்தைகளின் தினசரி வாழ்நாளில் சம்பந்தப்பட்டதாகவும், அவர்களுடைய மனப்பான்மைக்கும், உணர்ச்சி, ஊக்கம், சந்தோஷம், இவைகளுக்கும் அனுகுணமாகவும் உள்ள சந்தர்ப்பங்களில் நம்முண்டிய கணக்குகள் உபயோகப் படுமாறு நாம் பாடம் நடத்தல் வேண்டும். தின் பண்டங்கள் எவ்வளவு ருசிகரமாக இருக்கின்றனவோ அவ்வளவு ருசிகரமாகக் கணக்குப் பாடத்தை நாம் செய்ய முயற்சிக்க வேண்டும். அப்படிச் செய்வோமானால், அப்பாடத்தை பல உயர் வகுப்புப் பிள்ளைகள் வெறுப்பதை நம் கண்முன் காண்கிறோமே, இத்தகைய துக்ககரமான சந்தர்ப்பம் ஒருநாளும் வராது என நம்பலாம்.

எப்படி ஒரு பாடத்தை ருசிகரமாகச் செய்யலாம் எனச் சிந்திக்கும் பொழுது பாடம் (1) வாழ்நாள் சந்தர்ப்பங்களில் சம்பந்தப்படுத்தப் படல்வேண்டும். வீட்டுத் தின்பண்டங்கள் வாங்குதல், கடைக்குப் போய் சாமான்கள் வாங்குதல், சில்லரை வாங்குதல், கொடுத்தல், தோட்ட வேலை, சிறு காகிதங்களைக் கொண்டு விளையாட்டுச் சாமான்கள் செய்தல், இம்மாதிரியான பல சந்தர்ப்பங்களை நாம் கணக்குப் பாடத்துடன் சேர்த்துக் கணக்குகள் கொடுக்கவேண்டும். (2) குழந்தைகளின் ஸ்வபாவம் விளையாட்டாதலால் விளையாட்டு முறையில் பாடம் கற்றுக் கொடுக்கவேண்டும். (3) அவர்களுடைய கை வேலைக்குச் சந்தர்ப்பம் கொடுத்து அதன் மூலமாக புத்தியை வேலை செய்யுமாறு தூண்டுதல் வேண்டும். (4) சிலர் புத்திக் கூர்மையால் விஷயங்களை அறியக்கூடும். சிலர் கண் பார்வையாலும், சிலர் தொட்டுப் பார்த்தலாலும், சிலர் வர்ணம் முதலிய அழகிய தோற்றங்களாலும் விஷயங்களை கிரஹிக்க சக்தி வாய்ந்தவர்களாயிருப்பார்கள். ஆகையால் அவரவர்களுக்குத் தகுந்தமுறையில் பாடத்தை (**Individual Method**) அமைத்தல் வேண்டும். (5) வஸ்துக்கள், படங்கள் இவைகளை அதிகமாக உபயோகப்படுத்த வேண்டும். இவைகளைக் கொண்டு 'எண் ஞானம்' ஊட்டவேண்டும். 1, 2, 3,........ என்னும் சங்கேதங்களை ஆரம்பத்தில் உபயோகிக்கவே கூடாது. மேல் சொன்ன பல விதங்களில் எண்களைப்பற்றிய உணர்ச்சியும், எண்ணமும் மனதில் உதித்து, வேரூன்றிய பின்னர் சங்கேதங்கள் (1, 2, 3....) உபயோகப் படுத்தப்படவேண்டும். (6) பாடத்திலுள்ள கஷ்டங்களை ஆரம்பத்திலேயே எடுத்துச் சொல்லாமலும், "நீ முட்டாள், உனக்குப் பாடம் வராது, நீ சாப்பாட்டு ராமன்" என்னும் இத்தகைய ஏளனமான (நமக்கு ஏளனமாகத் தோன்றும். ஆனால் குழந்தைகளுக்கு அது விஷமாக முடியலாம்) வார்த்தைகளாலும் அவர்கள் இளம் மனதைக் கெடுக்கக் கூடாது.

நாம் இதுவரை பார்த்துவந்த இவ்விதிகள் பொதுவாக எல்லாப் பாடங்களைக் கற்றுக் கொடுப்பதிலும் அனுஷ்டிக்க வேண்டிய முறைகள் எனினும் கணக்குப் பாடத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது, மேலே சொன்ன 6 விஷயங்களில் 6-வதாகச் சொல்லப்பட்டதை முக்கியமாக எடுத்துக்கொண்டு "பின்னங்கள்" என்னும் பாடத்தை எப்படி ஆரம்பிக்கலாம் என கவனிப்போம்.

(1) எட்டு வயதுள்ள ஒரு சிறுவன் பள்ளிக்கூடம் $10\frac{1}{2}$ மணிக்கு ஆரம்பிக்கிறார்கள். எனக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் ரூ $2\frac{1}{2}$, காலணாவுக்குப் பெப்பர்மிண்ட் வாங்கினேன், என்னும் இத்தகையவார்த்தைகளைச் ரணமாகச் சொல்வான் என எதிர்ப்பார்க்கலாம். ஆனால் அவனுக்கு "$\frac{1}{2}$, $\frac{1}{4}$ என்றால் என்ன?" என்னும் கருத்து மனதில் தெளிவாகப்பட்டிருக்குமா? 4, 5 வயதுக் குழந்தை 20, 30 வரை தவறாமல் சொல்வது போலவே இப்பையனும் $\frac{1}{2}$, $\frac{1}{4}$ என்னும் வார்த்தைகளைக்கிளிப் பிள்ளை

யைப்போல் சொல்லலாம். எனினும் இச்சந்தர்ப்பங்களை அவன் மனிதற்கு ஞாபகப்படுத்தி "அரை, கால்—என்னும் வார்த்தைகள் எதைக் குறிக்கின்றன என்று பார்ப்போம்' என்று சொல்லிப் பாடத்தை ஆரம்பிப்போம்.

(2) ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்ட இரு வஸ்துக்களைக் காட்டி பெரிது, சிறிது; நீளம், குட்டை; என்ற வார்த்தைகளைப் பையனின் மனதில் படுமாறு செய்வோம். உதாரணமாக பெரியதாகவும், சிறியதாகவும் உள்ள இரண்டு மாம்பழங்கள்; அம்மாதிரியே இரண்டு பென்சில்கள்; இத்தகைய வஸ்துக்களை உபயோகிக்கலாம்.

(3) நான்கு பழங்களை இருவருக்குப் பங்கிடுவோம். (பழத்திற்குப் பதிலாக பெப்பர்மிண்டு முதலியவை உபயோகிக்கலாம்). ஒவ்வொருவனுக்கும் 2 பழங்கள் என்பதைத் தெளிவாகக் கண்முன் காட்டுவோம். பங்கிடும்பொழுது ஒவ்வொருவனுக்கும் கிடைப்பது கொடுத்த மொத்தத்தைக் காட்டிலும் குறைந்துவிட்டது என்னும் எண்ணம் மனதில் படவேண்டும். (வகுப்பில் எல்லார் கண் முன்பும் மந்திரவாதி வித்தை காட்டுவதுபோல் நாமும் நடத்திக் காண்பிப்பதில் தவறு ஒன்றும் இல்லை.)

(4) பிறகு இருவர்களை வகுப்பின் முன்னிலையில் நிறுத்தி ஒரு பழம் அவர்கள் முன்பு வைத்துக்கொண்டு இதை இருவருக்கும் எப்படிக் கொடுப்பது எனக் கேட்போம். தகுந்த விடை பிள்ளைகளிடம் சுலபமாக எதிர்பார்க்கலாம். பிறகு இருவருக்கும் பழத்தைக் கத்தியைக் கொண்டு அறுத்துக் கொடுப்போம். வீட்டில் தோசை தின்னும்பொழுது சிலசமயம் சிறு குழந்தைகளுக்குத் தாயார் முழுத்தோசையை இருபாகங்களாக்கிக் கொடுக்கமாட்டார்களா? அந்த சந்தர்ப்பத்தை அவர்களுக்கு ஞாபகப்படுத்துவோம். ஆனால் இம்மாதிரிப் பங்கிடுதலில் சற்று ஏற்றத்தாழ்வு ஏற்படலாமல்லவா? இம்மாதிரி ஏற்றத்தாழ்வு ஏற்படாமல் பங்கிடவேண்டும் என்னும் எண்ணத்தை அவர்களின் மனதில் ஊன்றுமாறு செய்து 'சமமாகப் பங்கிடுதல்" என்னும் வார்த்தைகளை உபயோகிப்போம்.

(5) ஒரு காகிதம், ஒரு நாடா இவைகளைக் கொண்டு பிள்ளைகளையே அவைகளை இரண்டு சமபாகமாகும்படி மடிக்கச் சொல்வோம். மடித்த ஒவ்வொரு பாகத்தையும், முழு வஸ்துவோடு ஒப்பிடச் சொல்வோம். இதிலிருந்து பாதி, அரை என்னும் வார்த்தையைச் சொல்லி இவ்வார்த்தைகளை இன்னும் எம்மாதிரியான சந்தர்ப்பங்களில் உபயோகிக்கலாம் எனப் பிள்ளைகளிடமிருந்து கேட்டு பதில் வாங்குவோம்.

(6) இம்மாதிரியே 'கால் பாகம்' 'முக்கால் பாகம்' என்பதின் கருத்தை விளக்குவோம். பிறகு இவைகளுக் குறிய சங்கேதங்களை எழுதுவோம். ($\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{3}{4}$).

(7) மாண்டிசாரி முறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வஸ்துக்கள் (**Apparatus**), தீக்குச்சிகளடங்கிய பெட்டிகள், மணிகள், சோழிகள்

இவைகளைக் கொண்டு $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$ பாகங்கள் என்று சொல்வதின் கருத்தை விளக்கியும், பிறகு, அவர்களைக் கொண்டே இந்த பாகங்களை எடுத்துக் காட்டச் சொல்லியும் பழக்கம் கொடுத்து பின்னங்கள் என்றால் என்ன என்னும் கருத்தை அவர்கள் மனதில் சந்தேக மில்லாமல் உணருமாறு செய்வோம்.

(8) கடைசியாக வகுப்பில் கரும்பலகையில் சித்திரங்களைக் கொண்டு (நேர்க்கோடு, சதுரம், நீண்ட சதுரம், வட்டம்) $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{3}{4}$ என்னும் பின்னங்களை விளக்குவோம். பிள்ளைகளையும் அம்மாதிரியான படங்கள் வரையச் செய்வோம்.

(9) அவர்கள் கை வேலையாலும், கண் பார்வையாலும், வஸ்துக்களின் உபயோகத்தைக் கொண்டு இப்பின்னங்களைப் பற்றிய கருத்துக்களை உண்மையாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்களா வென்று நாம் "$\frac{1}{2}$ என்றால் என்ன?" என்னும் கேள்வியைக் கொடுப்போம். இதைச் காட்டப் படம் வரையவும் செய்வோம். இது அவர்களால் ஒழுங்காகச் செய்யப்படுமானால் நாம் இப்பாடத்தைக் கற்றுக்கொடுக்க எடுத்த முயற்சிகள் சரி என மனமாரலாம். இல்லாத வரையில் பிள்ளைகளுக்குக் கடினம் வரக் காரணம் என்ன வென்று ஆராய்ந்து அதற்குத் தகுந்த முறையில் நாம் பாடம் சொல்லிக் கொடுப்பதைச் சீர்திருத்தவேண்டும்.

முக்கியமாக பின்னத்தைப்பற்றிய கருத்து பிள்ளைகளின் மனதில் சரியாகப் படாமல் போவதற்குக் காரணம் நாம் ஆரம்பத்திலேயே பின்னத்தைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லி உடனே கரும்பலகையில் சில படங்கள் வரைந்து காட்ட ஆரம்பித்து விடுகிறோம். இதை விட்டுவிட வேண்டும். குழந்தைகள் தங்கள் கண்கள், கைகளை உபயோகித்து அவர்களுக்குப் பிடித்த வஸ்துக்களைக் கொண்டு அவைகளைச் சமபாகங்களாக்க வேலைசெய்து, அதை வர்ணம் பூசிக் காட்டச் சொல்லியும், கத்தரித்துத் தனியாக ஒட்டச் சொல்லியும், அவர்கள்முன் அம்மாதிரியான படங்களை சதா பார்க்கும்படி ஒட்டி வைத்தும், அவர்கள் அடைந்த ஞானத்தை வளர்க்கும்படி மேலும் சந்தர்ப்பங்களை உண்டுபண்ணியும், இத்தகைய வழிகளை நாம் பாட முறையில் அனுஷ்டிப்போமானால் பின்னங்களைப்பற்றிய சரியான கருத்து அவர்களுக்குப் படும் என நம்பலாம்.

இவ்வழிகளாலும், "சமான பின்னங்கள்" என்னும் பாடத்தை ஒழுங்கான முறையில் கற்றுக் கொடுப்பதாலும் பின்னங்களைப்பற்றிய நான்கு விதிகள் சம்பந்தமான கணக்குகளை பிள்ளைகள் சுலபமாக அறிவார்கள்.

# செய்தித்திரட்டு

## சாரதா பாடசாலை, மாம்பலம்

### (a) பஜனை சங்கம்

18—10—42 ல் இச்சங்கத்தின் ஆதரவில் சரஸ்வதி பூஜையை முன்னிட்டு விசேஷ பூஜையும், சங்கீத உபாத்தியாயர் ஸ்ரீ. கே. அனந்தாசாரியரால் பக்க வாத்தியங்களுடன் இனிய சங்கீதக் கச்சேரியும் நடைபெற்றன.

### (b) பாஷா அபிவிருத்தி சங்கம் (தமிழ்)

26—10—42 ல் ஸ்ரீ எஸ். கோபாலகிருஷ்ணய்யங்கார் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம்கூடி மாணவ மாணவிகள் 'விடாமுயற்சி' என்னும் விஷயத்தைப்பற்றி பேசினார்கள்.

### (c) சார்தா குருஜெயர் மந்தை

29—10—42 ல் தலைவர் ஸ்ரீ முத்துசாமி அய்யருடன் 38 பேர்கள் சேர்ந்து திருசூலம் என்றவிடத்திற்கு உல்லாசப் பிரயாணம் சென்று வந்தார்கள்.

### (d) இந்தியர்செஞ்சிலுவைச்சங்கம் (வருஷாந்திர விழா)

1—11—42 ல் இவ்விழா, சைதாப்பேட்டை தாசில்தார் ஸ்ரீ ஆர். சுப்பிரமணிய அய்யர் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. மாணவ மாணவிகள் கும்மி, கோலாட்டம் அபிநயம், தேசீயகீதம், சுகாதார நாடகம் முதலியன ஒன்றன்பின்னொன்றாய் நடப்பித்து வந்திருந்த ஏராளமான பெற்றோர்களையும் மகிழ்வித்தனர்.

### (e) பாஷா அபிவிருத்தி சங்கம் (ஆங்கிலம்)

4—11—42 ல் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி ஆனரரி சர்ஜன் டாக்டர் பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் கூடி மாணவ மாணவிகளால் ஓர் கதம்பக் கச்சேரி நடைபெற்றது. பின்பு மாணவர்கள் '**Cleanliness**' என்ற விஷயத்தைப்பற்றிப் பேசினார்கள்.

---

## விழுப்புரம் தாலுகா, போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன்

17—10—42 ல் மூன்று பேர்கள் கொண்ட தூதுகோஷ்டி ஒன்று ஜில்லாபோர்டு பிரசிடெண்ட் அவர்களை நேரில் கண்டு யுத்த அலவன்ஸ் சம்பள அட்வான்ஸ், போஸ்டேஜ் அலவன்ஸ், கண்டிஞ்செண்ட் அலவன்ஸ் முதலியவைகளைப்பற்றி முறையிட்டதை அவர் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்து கடைசியில், தாம் ஆசிரியர்களிடம் அனுதாபம் கொண்டிருப்பதாயும், பணக்கஷ்டத்தால் உங்கள் வேண்டுகோள்களைத் திருப்திசெய்ய முடியவில்லை என்றும், போஸ்டேஜ் ஸ்டேஷனரி செலவுகளுக்கு மட்டும் 25% அதிகம் கொடுப்பதாக உறுதியளித்தார்.

---

## இந்துமத பாடசாலை, வாலாஜாபாத்

இந்துமகா சபையின் சென்னைப் பிரிவுத்தலைவர் உயர் திரு. பரசுராம ஜெதாநந்தஜீ வள்ளலார் மாணவர் இல்லத்திற்கு ரூ. 100 மதிப்புள்ள பசு ஒன்றை தானமளித்திருக்கிறார்.

## ஆசிரியர் சங்கம், அச்சிறுபாக்கம்

24—10—42 ல் கூடிய சங்கத்தில் ஆரம்ப ஆசிரியர்களின் அறிவு வளர்ச்சிக்கும், போதனுமுறை அபிவிருத்திக்குமாக 'பாலர் கல்வி' ப் பத்திரிகையை வரவழைக்குமாறு தீர்மானிக்கப்பட்டது.

---

## போர்டு ஹிந்து ஆண் ஆரம்பபாடசாலை, சத்தியமங்கலம் பெற்றோர் சங்கத்திறப்பு விழா

1—11—42 ல் இச்சங்கம் ரிடயர்டு ஜில்லா ரிஜிஸ்தரார் ஸ்ரீ. முத்துசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் பஞ்சாயத்து போர்டு தலைவர் ஸ்ரீ கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்களால் திறந்துவைக்கப் பட்டது. பெற்றோர்கள், பிரமுகர்கள், மாணவர்கள் பலரும் ஏராளமாக வந்திருந்தனர். மாணவர்கள் தேவாரமும் திருப்புகழும் பாடினர்கள். இச்சங்கத்தின் அவசியத்தைப்பற்றி பலர் பேசினர்கள். பிறகு நிர்வாக சபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பாடசாலை நேரத்தை மாற்றி உத்திரவிடும்படி ஜில்லா போர்டாரைக் கேட்டுக் கொள்ள ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

## நிலக்கோட்டை தாலுகா ஆரம்ப ஆசிரியர் யூனியன்

25—10—42 ல் இச்சங்கக் காரியக்கமிட்டி கூடிற்று. காலி ஸ்தானங்களுக்கு உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

1. விலைவாசி உயர்வை முன்னிட்டும் ஆரம்ப ஆசிரியர்களின் ஏழ்மை நிலையை உத்தேசித்தும் கவர்ன்மெண்டு சிப்பந்திகளுக்குக் கொடுப்பதுபோல் போர்டு ஆசிரியர்களுக்கும் யுத்த அலவன்ஸ் கொடுக்கும்படியும்,

2. சாதல்வார் தொகையை அதிகரித்துக் கொடுக்கும்படியும்,

3. 1—12—41 முதல் கிடைக்கவேண்டிய சிலருக்குச் சம்பள உயர்வைக் கொடுத்துதவும்படிக்கும் இச்சங்கம் தாழ்மையுடன் ஜில்லா போர்டாரை கேட்டுக்கொள்ளுகிறது.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், வத்ராப்

14—10—42-ல் இச்சங்கத்தின் விசேஷக் கூட்டம் நடைபெற்றது. மதுரை டிவிஷன் பிஸிகல் எடுகேஷன் டைரெக்டர் ஸ்ரீ பிச்சைப் பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார். அப்பொழுது பிரசித்திபெற்ற விஞ்ஞானியும், கல்கத்தா சர்வ கலாசாலை ஆசிரியருமான ஸ்ரீ K. S. கிருஷ்ணன் அவர்கள் 'ஸூர்யனின் அபார சக்தி' என்பதைப்பற்றி ஆராய்ச்சி பூர்ணமான சொற்பொழிவு செய்தார்.

---

## ஆத்தூர் தாலுகா ஆரம்ப ஆசிரியர் யூனியன்

27—9—42-ல் ஒரு ஸ்பெஷல் மீட்டிங் நடைபெற்றது. தீர்மானங்கள் :—

1. யுத்த அலவன்ஸ் கொடுக்கும்படி ஜில்லா போர்டு பிரசிடெண்டைக் கேட்டதற்கு அவர் பணம் இல்லை யென்றதால் அவரை மறுபடியும், சர்க்காரிடமிருந்து கடன் வாங்கியோ அல்லது இதர பண்டுகளிலிருந்து மாற்றிக்கொண்டோ ஆரம்ப ஆசிரியர்களுக்கு சர்க்கார் திட்டம்போல் யுத்த அலவன்ஸ் கொடுத்துதவும்படி தாழ்மையுடன் இச் சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

2. உணவுப் பொருள்களை சேகரித்து வைத்துக்கொள்ள நான்கு மாதச் சம்பளத்தை **P. F.** லிருந்தாவது கொடுத்துதவும்படியும்,

3. ஸ்டேஷனரி சாமான்களை ஜில்லா போர்டிலிருந்தே சப்ளை செய்யும்படியும், கேட்டுக்கொள்ளுகிறது.

---

## திருச்செங்கோடு ரேஞ்சு. கொமரபாளையம்
## கல்விவார விழா

23—10—42 முதல் 30—10—42 முடிய போர்டு ஆண் பாடசாலையில் இவ்விழா இனிது நடைபெற்றது. நிகழ்ச்சி முறைகள் :— 1. வகுப்பில் மாணவர்கள் பயிலுவதை பெற்றோர்கள் கவனித்தல், 2. தேகப் பயிற்சி விளையாட்டுகள், 3. சாரணர் செஞ்சிலுவை விளையாட்டுகள், 4. டிராமா பிராஜெக்ட்டுகள், 5. கும்மி கோலாட்டம், 6. உபந்நியாஸங்கள் :—(i) பள்ளிக்கூடமும் பெற்றோர் கடமையும், (ii) ஒழுக்கத்தின் விதி, (iii) சுகாதாரம்.

---

## ஆரம்ப பாடசாலை மானேஜர்கள் சங்கம்,
## கும்பகோணம் தாலூகா

11—10—42-ல் நிறைவேற்றிய தீர்மானங்கள் :—

1. மூன்றுவது மும்மாத கிராண்டுத் தொகையை, விலைவாசியின் உயர்வைக் உத்தேசித்தும், தீபாவளியை உத்தேசித்தும், நவம்பர் முதல் வாரத்திற் குள்ளாகவே கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

2. விலைவாசியின் உயர்விலும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு கொடுத்திருப்பதாலும், ஆரம்ப ஆசிரியர்களுக்கும் கிராண்டுத் தொகையுடன் சேர்த்து யுத்த அலவன்ஸ் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறது.

---

## ஸ்ரீராமா ஸங்கீத வித்யாலயத் திறப்புவிழா, கும்பகோணம்

19—10—42-ல் இச்சங்கீத வித்யாலயம், வீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அப்பொழுது அவர் ஆரம்ப பாடசாலைகளில் சங்கீதத்தின் அவசியத்தைப் பற்றி அழகாகப் பேசினார்.

---

## போர்டுஸ்கூல், எருக்கூர் (பெற்றோர் சங்கம்)

29—10—42-ல் பெற்றோர் தினம் 'கிராம சிரமைப்புவாரக்' கொண்டாட்டத்துடன் நடத்தப்பட்டது. சங்கத்தலைவர் ஸ்ரீ அப்பாசாமி அய்யர் தலைமை வகித்தார். மாணவிகளால் நடனமும், மாணவர்களால் 'எஸ்கிமோவும் பாலைவனச் சிறுவனும்' என்ற நாட்கமும் நடத்

திக் காண்பிக்கப்பட்டன. அரசூர் உதவிஸ்டேஷன்மாஸ்டர் ஸ்ரீ நரசிம் மய்யங்கார் அவர்கள் 'கிராம முன்னேற்றம்', 'பெற்றோர் ஒற்றுமை' என்ற விஷயங்களைப் பற்றிப் பேசினார். தலைவர் முடிவுரையில் இச் சங்கத்தின் அவசியத்தைப் பற்றி விரிவாகப் பேசினார்.

---

## நன்னிலம் தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன்

11—10—42-ல் இச்சங்கம் நிறுவப்பட்டு நிர்வாகஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு, இந்த யூனியனை அங்கீகரிக்கும்படி டைரக்டர் துரையவர்களை வேண்டிக்கொள்ளவும், பஞ்சப்படி விஷய மாகச் சென்ற தூதுகோஷ்டியின் கோரிக்கைகளை பொறுமையுடன் கேட்டு அனுகூலம் செய்வதாக வாக்களித்த ஜில்லாபோர்டு பிரசிடெண் டவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதுடன் பஞ்சப்படியை கூடிய சீக்கிரம் கொடுத்துதவும்படி கேட்டுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## அம்பாசமுத்திரம் தாலூகா உதவிபெறும் ஆரம்ப ஆசிரியர் சங்கம், சேர்மாதேவி கால்வருஷ மகாநாடு

25—10—42-ல் யூனியன் தலைவர் ஸ்ரீ கணபதி அவர்கள் தலைமை யில் நடைபெற்றது. தீர்மானங்கள் :—

(1) விலைவாசி உயர்வினால் சர்க்கார் சிப்பந்திகள் எல்லாருக்கும் யுத்தப்படி கொடுத்து இருக்க, யுத்த விஷயமாயும் தேசீய முன்னணி விஷயமாயும் அதிகமாக சேவை செய்யும் ஆசிரியர்கள் நிலைமை கவனிக் கப்படாம லிருக்கிறது. கிராண்டுகளையே நம்பிப் பிழைக்கும் எளிய ஆசிரியர்கள் நிலைமை கேவல மாகாதிருக்கும்படி சம்பள உயர்வும் யுத்தப்படியும் கொடுத்துதவும்படி சர்க்காரையும், டைரக்டரையும் வேண்டிக்கொள்ளுகிறது.

(2) லோகல் போர்டு எலக்ஷன் விஷயமாயுள்ள தடையை நீக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறது.

(3) ஆண் பாடசாலைகளில் பெண்களைச் சேர்க்கும் விஷயமாய் பெற்றோர்களுக்குச் சலுகைகாட்ட விதியை மாற்றி யமைக்கக் கேட்டுக் கொள்ளுகிறது.

---

## திருச்செந்தூர் தாலூகா, உதவிபெறும் ஆரம்ப ஆசிரியர் யூனியன், குலசேகரபட்டணம்

31—10—42-ல் இந்த யூனியன் இரண்டாவது கூட்டம் **Rev.** வில்லவறாயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

யுத்தப்படி விஷயமாயும், காகிதக் கஷ்டத்தால் போதனை உபகர ணங்களை வற்புறுத்தாம லிருக்கும்படியும், எட்டாவது வகுப்பு தமிழ் பாடபுத்தகத்தில் தனபாலன் என்ற பாடத்தை பரீட்சைக்கு நீக்கி வைக்குமாறும் தீர்மானங்கள் நிறைவேற்றி டைரக்டர் துரையவர்களை வேண்டிக்கொள்ளுகிறது.

பிறகு 'நமது நோக்கம் என்ன' என்பது பற்றி ஸ்ரீ ராமசுவாமி அய்யர் பேசினார்.

---

## டவுன் ஆரம்ப ஆசிரியர் சங்கம், தஞ்சாவூர்

11—11—42-ல் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ டி. வி. வெங்கட்டராமய்யர் அவர்கள் தலைமையில் கூடிற்று. ஜில்லா யுத்த ஆர்கனைசர் ஸ்ரீ சுயம்பிரகாசம் அவர்கள் 'தற்கால யுத்த நிலைமையும், மக்களின் மன உறுதியும்' என்பதுபற்றி விரிவாகப் பேசினார். பின்பு தலைவர் அவர்கள் 'கணிதம் போதித்தல்' என்பதுபற்றி விரிவாகப் பேசினார்.

---

## கடிதப் பெட்டி

செங்கல்பட்டு ஜில்லாபோர்டு ஆசிரியர் மகாநாடு நடைபெறும் விஷயமாய் மதுராந்தகம் ஆசிரியர்கள் முன்னின்று மகாநாட்டை மதுராந்தகத்தில் நடத்த விரும்புவதால் இதர யூனியன்களின் தலைவர், செக்ரிடரிகளிடமிருந்து அபிப்பிராயங்கள், தீர்மானங்கள், நன்கொடை முதலியன எதிர்பார்க்கப் படுகிறது. மகாநாட்டை டிசம்பர் மாதம் நடத்த உத்தேசம்.

விலாசம் :—

ஹெட்மாஸ்டர்,
போர்டு பாடசாலை, கயப்பாக்கம்,
(via.) அச்சரபாக்கம்.

P. N. கலியாண சுந்தரன்,
செக்ரிடரி
26—10—42.

REGD. No 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
முத்திரை
ரிஜிஸ்டர் நெ. 1506

அசோகா சுகந்த பாக்கு தூள்

தயாரிப்பவர் :
எம். கே. கிருஷ்ண செட்டி,
அசோகா பாக்டரி,
கோயமுத்தூர்.

அரிய சந்தர்ப்பம்

# ஏ. ஆர். பி. ஸ்டிர்ரப் பம்புகள் நிகர விலை ரூ. 25




கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டு
விலை நிர்ணயிக்கப்பட்டது

இலவச டெலிவரி - ஸ்டாக்கி
லிருந்து - ரப்பர் ஹோஸுடன்

உங்கள் சொத்து சுதந்திரத்தை
பாதுகாருங்கள்

**எப்பொழுதும் ஸ்டிர்ரப்
பம்பு வைத்திருங்கள்**

குண்டுகளிலிருந்து உங்களை
பாதுகாக்கும்



சமாதான காலத்திலும், கார்களை சுத்தம் செய்யவும் இதர வேலைகளுக்கும் உபயோகமாகவுள்ளது.

: இதர விபரங்களுக்கு



அல்லது :

**ஸெல்வின் டிரேடிங் கம்பெனி,**
**கோபால் பாக், த. பெ. 707, மவுண்ட் ரோட், மதராஸ்**

**பாரி & கம்பெனி, லிமிடெட்,**
டேர் ஹவுஸ், த. பெ. 12, :: மதராஸ்.

**மாகாணத்திலுள்ள பாரி & கம்பெனி லிமிடெட்டின் எல்லா டிப்போக்களிலும் கிடைக்கும்.**

# பத்திராதிபர் குறிப்பு

## பல்கலை வண்டி

சுதந்திர சீனா படும் துயரம் அளவிலாதது. ஜப்பானிய ஆக்கிரமிப்பினால், பல வருஷங்களாக ஒரு கொடும் போரில் அந்நாடு ஈடுபட்டிருக்கிறது. நேசதேசத்தவர்கள் அதற்கு உதவி புரிந்து வருகிறார்கள். எனினும் சீனர்கள்படும் கஷ்டத்தைச் சொல்லிமுடியாது. சீனமக்கள் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றும்பொருட்டு போராடுகிறார்கள். அச்சுதந்திர லக்ஷியமே அவர்களுக்கு தைரியமூட்டி வருகின்றது. போரில் வெற்றியடைவது திண்ணம் என்ற உறுதி அம்மக்களின் இடையேயுளது. வெற்றி யடைந்தாலும், எந்த லக்ஷியத்திற்காக இவ்வளவு கஷ்டத்துடன் போர் புரிகின்றார்களோ, அதைக் காப்பாற்றவும் வகிக்கவும் தகுதியாயிருக்கவேண்டும் யுத்தத்திற்குப் பிறகு ஏற்படும் சீன சமூகம். எனவே, யுத்தம் தீவிரமாக நடக்கும் காலத்திலும் சீனத் தலைவர்கள் சமூக சீர்திருத்தத்தையும் கவனித்து வருகிறார்கள். சீன மக்கள் எழுத்தறிவாளர்களாக இருப்பது அவசியம் என்பதை அந்நாட்டுத் தலைவர்கள் நன்குணர்ந்துள்ளார்கள். மக்களுள் எழுத்தறியாமைமையைப் போக்குவதற்கு, **Dr. Tai,** என்னும் சீன தேசத்து பேராசிரியர் ஒரு நவீன முறையைக் கண்டுபிடித்துள்ளார். 'பல்கலை வண்டி' என்னும் பெயர் மிகப் பொருத்தமாயுள்ள ஒரு வண்டி, சீனக் கிராமங்களுக்குச் சென்று அம்மக்களுக்கு கல்வி அமுதை ஊட்டுகின்றதாம். சக்கரங்களின் மேல் அமைந்துள்ள ஒரு பெட்டியில், உபயோகமான கல்வி போதனைக்கு வேண்டிய பல உபகரணங்கள் அடங்கியுள்ளன. இப்பெட்டியானது 2 அடி உயரமும், 2 அடி நீளமுமே இருக்கின்றதாம். ஆயினும், இப்பெட்டியில் ஒரு பள்ளிக்கூடம் நடத்தவேண்டிய உபகரணங்களும், கிராம வாசிகளிடையே ஒரு ஊக்கமும் கல்வி ஆர்வமும் ஏற்படுத்தக் கூடிய பல பொருள்களும் அடங்கியுள்ளனவாம். இது ஒரு நகரும் பள்ளிக்கூடம், ஒரு நூல் நிலையம், ஒரு நகரும் பொருட்காக்ஷி, கிராம வாசிகளுக்கு வேண்டிய சாமான்கள் விற்பனை செய்யும் கடை, இத்துடன் செல்லும் ஆசிரியர் தங்குமிடம், ஆக ஐந்து வகையில் உபயோகமாகிறதாம். இந்த நவீன பள்ளிக்கூடம் தயார்செய்ய 440 டாலர்கள்தான் பிடிக்கிறதாம். இத்துடன் செல்லும் ஆசிரியர்கள் தேசத் தொண்டர்கள். தீவிர தேசிய உணர்ச்சி உள்ளவர்கள். தேசத்தின் நன்மைக்காக எந்த தியாகமும் செய்யத் தயாரா யிருப்பவர்கள். தவிர, சீன தேசத்து பல்கலைச் சாலைகளில் பயிலும் பல மாணவர்கள் தினசரி ஒருமணி நேரமாவது இவ்வேலையில் ஈடுபட முன்வந்திருக்கிறார்களாம். இவ்வாசிரியர்கள், எழுத்தறியாமையைப் போக்குவது மாத்திரமில்லாமல், கிராம வாசிகளுக்கு சுகாதாரமும், சீனர்களின் சரித்திரமும், உலக சமுதாயத்தில் சீனர்களின் இடம், கைத்தொழில் அபிவிருத்தி, கிராமப் பொருளாதார அபிவிருத்தி, இத்துறைகளிலும் பயிற்சி அளிக்கிறார்களாம். நம் நாட்டில் இதுபோல் செய்ய இடமுள்ளதா? இது ஆசிரியர்கள் தேசத்துக்குச் செய்யக்கூடிய ஒரு பெரிய தொண்டல்லவா?

S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS

BAZAAR ROAD, VILLUPURAM.

## செலுத்த வேண்டிய தொகை

30 வயதுக்குள்ளிருப்பவர்கள் :

சேரும்போது

பிரவேசக் கட்டணம் .... ரூ. 1.

வருஷக் கட்டணம் .... ரூ. 2.

மாதச் சந்தா .... ரூ. 1 முதல் 4 வரையில்

பிரதி வருஷமும் சேரும் மாதத்தில் .... ரூ. 2

பிரதி மாதமும் .... ரூ. 1 முதல் 4 வரையில்

30 வயதுக்கு மேலிருப்பவர்கள் :

அதிக வயது ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 அதிகமாக, சேரும்போது மாத்திரம் பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... | ... | ரூ. 2,25,000 |
| பாலிஸிக்கள் | ... | ... | 1,350 |
| யூனிட்டுகள் | ... | ... | 2,500 |

## அனுபவிக்கும் லாபம்


1. மரணம் ஏற்பட்டால், நியமித்த வார்சுகளுக்குத் திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

மாதா மாதம் ரூ. 1 செலுத்தினால், கிடைக்கக்கூடிய பணம் ரூ. 250 முதல் ரூ. 375 வரை.

2. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம்.

3. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து விலகும்படி ஏற்பட்டால், திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

Regd. No. M. 3473



# புதிய எண்ணங்களுக்கு

மாணவர்கள், [illegible] ருக்கள் [illegible] மூளைக்கு [illegible] புதிய புதிய எண்ணங்களை வெளியிட [illegible] தான். [illegible] ஓர் [illegible] மூளையை சுறுசுறுப்பாக்கி [illegible] சக்தியை விருத்தி செய்யும் [illegible]. புதிய எண்ணங்களைப் பெற டீ அருந்துங்கள்.

ஊக்கமளிக்க



**டீ தயாரிக்கும் முறை:** சுத்தமான தண்ணீரைக் கொதிக்க வைத்து ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும், அதிகமாக ஒரு ஸ்பூன் அளவும், நல்ல இந்திய தேயிலையைப் போட்டு கொதிக்கும் ஜலத்தை விட்டு, ஐந்து நிமிஷம் கழித்து வடிகட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

# இந்தியன் டீ

சர்வ சாதாரணமான பானம்

இந்தியன் டீ மார்கெட் எக்ஸ்பான்ஷன்
போர்டாரால் வெளியிடப்பட்டது

I.K.147.V.

Printed by K. Sadagopachariar at the Liberty Press, 10, Linghi Chetty St., Edited & Published by Mr. M. S Sabhesan, M.A., "for The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras.